ஆணையர் ஆவடி மாநகராட்சி அவர்களின் செயல்முறை உத்தரவு
முன்னிலை : ச.கந்தசாமி, இ.ஆ.ப

ந.க.எண்: 3151/2024/எப்1 **நாள்:27.08.2024**

பொருள்: மனைப்பிரிவு – ஆவடி மாநகராட்சி – பருத்திப்பட்டு கிராமம் – சர்வே எண்: 527/1ஏ1, 1ஏ2, 1பி1 பகுதி, 528/1 பகுதி முதல் 7 பகுதி வரை, 529/2 பகுதி, 533/1 பகுதி மற்றும் 2 பகுதி, வார்டு – ஐ, பிளாக் எண் – 85, நகரளவை எண்: 28/8, 29/1 முதல் 9 வரை 32/1, 12, 13, 15, 16 மற்றும் 33/2 – இல் 44076 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 283 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டது – மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் கடிதம் எண்: L1/0314/2023.
2. ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் எண்: 5027/2024, தேதி: 10.04.2024.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28, அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12843/2022/டிபி – 2 , நாள்: 20.10.2022.
4. மாநகராட்சி பொறியாளர், ஆவடி மாநகராட்சி அவர்களின் குறிப்பு, நாள்: 24.06.2024.
5. ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 2007, நாள் : 27.08.2024

****

உத்தரவு :-

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, பருத்திப்பட்டு கிராமம், சர்வே எண்: 527/1ஏ1, 1ஏ2, 1பி1 பகுதி, 528/1 பகுதி முதல் 7 பகுதி வரை, 529/2 பகுதி, 533/1 பகுதி மற்றும் 2 பகுதி, வார்டு – ஐ, பிளாக் எண் – 85, நகரளவை எண்: 28/8, 29/1 முதல் 9 வரை 32/1, 12, 13, 15, 16 மற்றும் 33/2 – இல் 44076 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 283 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு M/s Sri Lakshmi Homes Pvt, ltd., rep by S.Velu GPA on behalf of M/s Om Sakthy Fire Reality Pvt., என்பவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதனை பார்வை 1–இல் காணும் உறுப்பினர் செயலர்,

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், ~~சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்~~, சென்னை அவர்களின் 24.04.2024 ஆம், தேதிய கடிதத்தில் மனைப்பிரிவிற்கு **PPD/LO.No.85/2024**, மற்றும் திட்ட அனுமதி எண்.**15807**, என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காவிற்கான இடத்தினை பார்வை – 2 இல் கண்டுள்ளப்படி, ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் M/s Sri Lakshmi Homes Pvt, ltd., rep by S.Velu GPA on behalf of M/s Om Sakthy Fire Reality Pvt அவர்களால் ஆணையாளர், ஆவடி மாநகராட்சிக்கு தானமாக பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டது. பார்வை – 3 இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் படி மனுதாரரால் உத்தேச மனைப்பிரிவிற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் செய்யப்பட்டாத சாலைகளுக்கு மட்டும் பார்வை 4–இல் கண்டுள்ள குறிப்பின் படி M/s Sri Lakshmi Homes Pvt, ltd., rep by S.Velu GPA on behalf of M/s Om Sakthy Fire Reality Pvt அவர்களால், ஆவடி மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய தொகை ரூ.72,50,000/– இரசீது எண்.012/01/3/24–25/0003515, நாள் : 26.06.2024 செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கான அனுமதிக்கட்டணம் ரூ.15,81,200/– மாநகராட்சி கரூவுலத்தில் இரசீது எண்.012/01/3/24–25/0004754, 0004755, 0004756, நாள்: 26.06.2024 இல் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5–ல் கண்டுள்ள ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 2007, நாள் : 27.08.2024–ல் மேற்படி மனைப்பிரிவிற்கு **அனுமதி வழங்க** ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர் / மனுதாரர் குடியிருப்பு மனைப்பிரிவு மட்டும் அமைத்துக்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இத்துடன் இணைத்துள்ள வரைபடத்திற்கு மனைப்பிரிவு அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவீத மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளரை சாரும்.
2. மேற்கண்ட மனைப்பிரிவு உள்ள பொது சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை வருவாய் / நகரளவை ஆவணங்களில் உரிய உட்பிரிவு செய்யும் பணியினை மனைப்பிரிவு உரிமையாளர் / மனுதாரர் செய்து மாநகராட்சிக்கு உரிய நேரத்தில் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி.

4/5

பெறுநர்,
M/s Sri Lakshmi Homes Pvt, ltd., rep by S.Velu
GPA on behalf of M/s Om Sakthy Fire Reality Pvt.,
No.28, Anna Street,
Kallikuppam, Ambattur,Chennai 600 040.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :
உறுப்பினர் – செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
காந்தி ஈர்வின் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.